



ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் சு.முத்துச்சாமி திண்டல் காரப்பாறையில் தனது பிரச்சாரத்தை கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் துவக்கினார். பிரச்சாரத்தில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாணவரணிச் செயலாளர் வீரமணி, மாவட்ட கழக நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், க.சின்னையன், செல்லப்பொன்னி, ப.க.பழனிச்சாமி, டி.எஸ்குமாரசாமி, ப.மணிராசு, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், பகுதி கழக செயலாளர்கள் அக்னி டி.சந்திரசேகரன், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், வி.சி.நடராஜன், குறிஞ்சி என்.தண்டபாணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியில் திமுக கூட்டணியில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன், திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியரும், தேர்தல் நடத்தும் அலுவலருமான லெனினிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். பின்னர் உறுதிமொழி படிவத்தை வாசித்து, ஒப்புதல் சீட்டை பெற்றுக்கொண்டார். வேட்புமனு தாக்கல் செய்த நிகழ்ச்சியின் போது நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளருமான கே.எஸ்.மூர்த்தி, , தேமுதிக மாவட்ட செயலாளர் விஜய பிரபாகரன், காங்கிரஸ் கட்சி மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்




கும்பகோணம் சட்டமன்ற தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் கும்பகோணம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.இராமலிங்கம், சி.பி.எம். மு.அ.பாரதி, வி.சி.க ராஜசேகர் ஆகியோர் உடன் உள்ளனர்.




திருவையாறு சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் துரை.சந்திரசேகரன் திருவையாறு வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் காங்கிரஸ் வட்டார தலைவர் அறிவழகன், சி.பி.எம்.கண்ணன், சி.பி.ஐ. ராமலிங்கம். தே.மு.தி.க. சிவக்குமார், வி.சி.க விடுதலை வேந்தன் ஆகியோர் உள்ளனர். முன்னதாக திருவையாற்றில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், ஒன்றியச் செயலாளர்கள் கல்லணை செல்லகண்ணு, சிவசங்கரன், முருகானந்தம், அரசாபகரன், கௌதமன், அசோக்குமார் உள்ளிட்ட பேரூர் செயலாளர்கள் தோழமைக் கட்சியினர் பங்கேற்றனர்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின்

# திருவையாறு சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை !

தஞ்சாவூர் ஏப். 1-

தஞ்சை மத்திய மாவட்டம், திருவையாறு சட்டமன்ற தொகுதி செயல் வீரர்கள் கூட்டம் திருக் காட்டுப்பள்ளி பவானி திரு மண மண்டபத்தில் இன்று (01.04.2026) மாலை 04.00 மணிக்கு நடைபெற உள்ளதாகவும், அதில் கழக நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், திருவையாறு சட்மன்ற தொகுதி வேட்பா



ளருமான துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : இன்று (01.04.2026- புதன் கிழமை) மாலை 04.00 மணிக்கு திருக் காட்டுப்பள்ளி, பவானி திருமண மண்டபத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் திருவையாறு சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், செயல் வீரர்கள் பங்கேற்க உள்ளனர். அதுசமயம் கூட்டத்திற்கு நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், முன்னாள் - இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதி கள், தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### கரூர் – கோவை மாவட்டங்களில் வெற்றி உறுதி!

# தி.மு.க. கூட்டணிக்கு நாளுக்குநாள் ஆதரவு பெருகி வருகிறது!

## வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பேட்டி!

கரூர். ஏப்.1-

கரூர், கோவை மாவட்டங்களில் கழகம் வெற்றி உறுதி. பெருகி வரும் மக்கள் ஆதரவை பொறுத்துக் கொள்ள முடியாமல் எதிர்க் கட்சியினர் அவதூறுகளை கிளப்பி விடுகின்றனர் என கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறினார்.

கரூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் ஆசி. எம். தியாகராஜனை ஆதரித்து மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி பிரச்சாரத்தை தொடங்கினார். கரூர் கோடங்கிபட்டி பட்டா



ளம்மன் முத்தாலம்மன் கோவிலில் வழிபாடு செய்து விட்டு திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார். மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

கரூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளராக தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களது ஆசியுடன் ஆசி.எம். தியாகராஜன் அவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே கழக முக்கிய நிர்வாகிகளை சந்தித்து ஆதரவு கேட்டார். இப்போது பிரச்சாரத்தை தொடங்கியுள்ளார்.

கரூர் மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் உதயசூரியன் சின்னத்திற்கு பொதுமக்கள் வாக்களித்து மகத்தான ஆதரவை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2021 தேர்தலில் நான்கு தொகுதிகளிலும் திமுகவை வெற்றி பெறச் செய்த மாவட்ட மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக ஐந்து ஆண்டுகளில் கரூர் மாவட்டத்திற்கு ரூ.5000 கோடி அளவிற்கான வளர்ச்சி திட்டங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி உள்ளார்கள். கரூர் மாநகராட்சியில் மட்டும் ஏறத்தாழ ரூ.1040 கோடி அளவிற்கு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதலமைச்சர் அவர்களுடைய திட்டங்களை பட்டியலிட்டு வீடு வீடாகச் சென்று, உதய சூரியனுக்கு ஆதரவு தாருங்கள் என வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். ஐம்பதாயிரம் வாக்குகள் வித்தியா சத்தில் கரூர் தொகுதி கழக வேட்பாளர் ஆசி. தியாகராஜன் வெற்றி பெறுவது உறுதி.

சில பேர் ஆட்சியில் இருந்தபோது எதையும் செய்யவில்லை. எதிர் முகாமினர் ஏதாவது செய்திருந்தால் தானே கூற முடியும். ஒன்றும் செய்யவில்லை என்பதால் தேர்தல் அறிக்கையை வைத்து ஓட்டு கேட்டு வருகின்றார்கள். ஆனால் கழக தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையானது அடித்தட்டு மக்கள் வரை பயன்படக்கூடியதாக இருப்பதால் மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றிருக்கிறது.

இன்றையதினம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்ட மன்ற தொகுதிகளிலும் கழக வேட்பாளர்களை ஆதரித்து ராயனூரில் நடைபெறும் பிரம்மாண்ட பொதுக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றுகின்றார்கள். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**தலைவர் இட்ட கட்டளை**

தலைவர் அவர்கள் இட்ட கட்டளைப்படி நான் கோவை தொகுதியில் போட்டியிடுகிறேன். முன்பு அரவக்குறிச்சியில் தலைமையின் கட்டளைப்படி போட்டியிட்டு வெற்றி பெற்றேன். அதன் பிறகு கரூரில் வெற்றி பெற்றேன். இன்றைக்கு கரூரிலும் கோவையிலும் மாபெரும் வெற்றி உறுதி என்பதை வாக்கு எண்ணிக்கை என்பது நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். இதை பொறுத்துக் கொள்ள முடியாமல் எதிர்க் கட்சியினர் அவதூறுகளை கிளப்பி விடுகின்றனர். கரூர் மாவட்டமும் கோவை மாவட்டமும் எனது இரு கண்கள் உயிரும் உடலும் போல.

இவ்வாறு செந்தில் பாலாஜி கூறினார்.

# பத்திரிகையாளர் கோரிக்கையை ஏற்று அறிவித்த முதல்வருக்கு நன்றி!

சென்னை,ஏப்.1-

பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்கள் நலன் கருதி தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் சார்பில் திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் நமது யூனியன் நிர்வாகிகள் அளித்த கோரிக்கைகளான

மருத்துவ சிகிச்சைக்கான தொகை உயர்த்தி வழங்கப்படும் பத்திரிகையாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகைகள் அனைத்தும் இருமடங்காக்கப்படும் அரசு வாடகை குடியிருப்பில் 3 விழுக்காடு பத்திரிகையாளர்களுக்கு இடஒதுக்கீடு உறுதிசெய்யப்படும் ஓய்வூதியம் மருத்துவ உதவி போன்ற திட்டங்கள் காட்சி ஊடகத்தில் பணியாற்றும் பத்திரிக்கையாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் உள்ளிட்ட கோரிக்கைகளை தேர்தல் அறிக்கையில் இடம் பெறச் செய்த முதலமைச்சர் அவர்களுக்கும் தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவரும் திமுக துணை பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்ட தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவினருக்கு தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியனின் நன்றியை தெரிவித்து கொள்வதோடு பத்திரிகை ஊடகவியலாளர்கள் நலன் கருதி அளிக்கபட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி பத்திரிகை ஊடகவியலாளர்களின் நலன் பேண வேண்டும் என்று தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் கேட்டுக்கொள்கிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. மாசிலாமணி

**ஏப்ரல் 1 (2021)**



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பேச்சுகளால் ஈர்க்கப்பட்டு, இளமைப் பருவம் முதலே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**தலைமைக் கழகப் பேச்சாளராகவும், மாநில தொண்டர் அணிச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் படித்தபோது, விபரீதமான – விரும்பத்தகாத – வேண்டாத ஒரு நிலைமை உருவாக்கப்பட்டு, அதன் விளைவாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**1982ல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இவரது மணவிழாவினை நடத்தி வைத்தபோது "புரட்சிக் கவிஞர் வரிகளுக்கேற்ப சிறுத்தைக் கூட்டத்தில் உள்ள ஒரு சிறுத்தைதான் தம்பி மாசிலாமணி'' என்று பாராட்டினார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**